**நாள்: 15.07.2026**

**O.S. No. 84/2024**

**பி.சா.2**
**பெயர்: ராஜேந்திரன் , த/பெ. ரத்தினம்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் சமையல் வேலை செய்து வருகிறேன். சமையல் வேலைக்காக நான் வெளியூர் செல்வதுண்டா என்றால் உள்ளூர் மற்றும் வெளியூர் இரண்டுக்கும் செல்வேன். எனக்கு சொந்தமாக விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் புலஎண் தெரியாது. எனக்கு சொந்தமாக விவசாய நிலம் எதுவும் இல்லை என்றாலும் விவசாயம் பார்க்கவில்லை என்றாலும் நான் சமையல் வேலைக்காக வெளியூரிலேயே இருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதியின் தகப்பனார் பஞ்சாமிருதம் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. பஞ்சாமிருதத்திற்கு எத்தனை பிள்ளைகள என்றால் மூன்று மகன் மற்றும் 2 மகள் உள்ளனர். மற்றவர்கள் பெயர் தெரியாது. பஞ்சாமிருதம் தனக்குரிய சொத்துக்களை குறித்து ஆவணம் எதுவும் எழுதி வைத்தது தொடர்பாக தெரியுமா என்றால் தெரியாது.

தாவா சொத்து புலஎண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்து தொடர்பான ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்து குறித்து எனக்கு எவ்வித விபரமும் தெரியாமல் பிரதிவாதி கேட்டு கொண்டதால் பிரதிவாதி அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.07.15 18:38:53 +0530

**நாள்: 15.07.2026**

**O.S. No. 84/2024**

**பி.சா.3**
**பெயர்: அருள்தாஸ் , த/பெ. பரமசிவம்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வெல்டிங் சாப் வைத்துள்ளேன். வெல்டிங் தொழில் காரணமாக நான் உள்ளூர் மற்றும் வெளியூருக்கு சென்று வேலை பார்ப்பேன் என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக விவசாய நிலம் உள்ளதா என்றால் இல்லை.

பஞ்சாமிருதம் குடும்ப ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. 26.08.2010 தேதிய கிரய ஆவணத்தை நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைவி பிரதிவாதி சக்திவேல் வீட்டில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து புலஎண் விஸ்தீரணம் ஆகியவை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

எனக்கு தாவா சொத்து குறித்து எனக்கு எவ்வித விபரமும் தெரியாமல் என் மனைவி பிரதிவாதி வீட்டில் வேலை செய்து வருவதாலும் பிரதிவாதி கேட்டு கொண்டதாலும் பிரதிவாதி அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//